D.V.C 01/2018
Pw1–செல்லம்மாள்
Date : 16.11.2022

<u>மனுதார் தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

1. எனது தரப்பு முதல் ஆவணமாக எங்களது குடும்ப அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.1 ஆகவும், நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் அசல் ம.சா.ஆ.2 ஆகவும், எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடடன் ஒப்பிடப்பட்டது) ம.சா.ஆ.3 ஆகவும், இரண்டாம் இளவர் மனுதாரரின் பிறப்புச்சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.சா.ஆ.4 ஆகவும், மூன்றாம் இளவர் மனுதாரரின் பிறப்புச்சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.சா.ஆ.5 ஆகவும், 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் நகல் ம.சா.ஆ.6 ஆகவும், எனக்கு ஏற்பட்ட புற்றுநோய்க்கு மதுரை K.G.S ஸ்கேன் சென்டரில் வழங்கப்ட்ட ஸ்கேன் அறிக்கை ம.சா.ஆ.7 ஆகவும், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் கடந்த 24.03.2014ம் தேதி முதல் 02.04.2014ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததற்கான Discharge Summary நகல் ம.சா.ஆ.8 ஆகவும், மேற்படி புற்றுநோய்க்கு தற்போது சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான காரைக்குடி லெட்சுமி ஆயுர்வேத மருத்துவமனை மருத்துவரால் வழங்கப்பட்ட சான்று அசல் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுவில் கண்டுள்ள பரிகாரங்கள் வழங்க கோரப்படுகிறது.

எதிர் மனுதாரர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.